மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 05–ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண்.136/24

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: வேம்பு | தேதி : 05.11.25 |
| வயது : | த/பெ : யாக்கோப்பு |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>05.11.25 குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்தின் சர்வே எண். 475/24 ஆகும். என் மனைவி மல்லிகா பிறந்த ஊர் புதுப்பச்சேரி. தாவா சொத்திற்கு என் மனைவி பெயரில் பட்டா மற்றும் கிரைய பத்திரம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கில் வடக்கு தெருவில் எனது வீடு உள்ளது என்றால் அதே தெருவில் கிழக்கில் உள்ளது. என் வீட்டின் கதவு எண் 8/21 ஆகும். தாவா சொத்து காலிமனை என்றால் சரிதான்.

2.நான் சொல்லியுள்ள கதவு எண் 8/73A தாவா சொத்தில் இல்லை என்றால் முதலில் இருந்தது தற்போது இல்லை. தாவா சொத்தில் எந்த வருடம் என் மனைவி வீடு கட்டியதாக சொல்கிறேன் என்றால் அது வீடு இல்லை மண்சுவர் கொண்ட குடிசையாகும். தாவா சொத்தினை ஆணையர் நியமனம் செய்து பார்த்தால் மேற்படி மண்சுவர் கொண்ட குடிசை துலங்குமா என்றால் தற்போது பென்சிங்தான் உள்ளது.

3.தாவா சொத்தில் மண்சுவர் குடிசை இருந்ததாக தற்போது துலங்காது என்றால் சரிதான். அது மழையில் அழிந்துவிட்டது. எந்த ஆண்டு பெய்த மழையில் அது அழிந்து போனது என்றால் 2021 ல் பெய்த மழையில் அழிந்தது. அதற்கு அரசு மூலம் நிவாரணம் எதுவும் வாங்கியுள்ளோமா என்றால் இல்லை.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.05 20:41:08 +0530

தாவா சொத்தில் நான் சொல்லுவது போல் வீடு எதுவும் கிடையாது என்றும், அதன் மழையில் அழிந்துவிட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4.தாவா சொத்தில் என் மனைவிக்கு உரிமை மற்றும் அனுபவம் உள்ளது என்பதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 25 வருடமாக நான்தான் தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வருவதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணம் எதுவும் என் பெயரில் இல்லை என்றால் என் மனைவி பெயரில் உள்ளது. வா.சா.ஆ 1 வீட்டு வரி ரசீதுக்கும் தாவா சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

5.தாவா சொத்திற்கு பக்கத்தில் யார் குடியிருக்கிறார் என்றால் சுந்தர் உள்ளார். அவர் வீட்டு கதவு எண் தெரியாது. வெள்ளமடம் ஊராட்சிமன்ற தலைவரை விசாரித்தால் வா.சா.ஆ 1 வீட்டு வரி ரசீது எந்த இடத்தில் இருந்த வீட்டிற்குரியது என்று துலங்கும் என்றால் சரிதான். பஞ்சாயத்து அலுவலரை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்கிறேனா என்றால் தலைவர் கிடையாது கிளார்க் வருவார். வா.சா.ஆ 2 வாக்காளர் அடையாள அட்டை, வா.சா.ஆ 3 ஆதார் அட்டைக்கும் தாவா சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

6.வா.சா.ஆ 4 இறப்பு சான்றுக்கும் தாவா சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 7 மின்சார வாரிய கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள கதவு எண் 8/73A எந்த புல எண்ணில் உள்ளது என்று அதில் துலங்காது என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் பிரதிவாதிகளின் அனுபவத்தினை தாவா சொத்தில் இடையூறு செய்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு 07.10.24 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதை நான் பெற்றுக்கொண்டேன்.

7.என்னிடம் காண்பிக்கப்படும் அறிவிப்புதான் எனக்கு வந்த அறிவிப்பின் அலுவலக நகல் என்றால் சரிதான்.**(மேற்படி அறிவிப்பு பி.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காண்பிக்கப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டை நான் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கானது ஆகும்.**(மேற்படி அஞ்சல் ஒப்புதல்**

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.05 20:41:13 +0530

**அட்டை பி.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி பி.சா.ஆ 1 அறிவிப்பிற்கு நான் பதில் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கு பிறகு 1ம் பிரதிவாதிக்கு எதிராக முன் எச்சரிக்கை மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

8.பி.சா.ஆ 1 அறிவிப்பு மற்றும் மேற்படி முன் எச்சரிக்கை குறித்து வழக்குரையில் சொல்லவில்லை. பி.சா.ஆ 1ல் 1ம் பிரதிவாதியின் கணவர் பரமானந்தத்துக்கு நில ஒப்படைவு மூலம் தாவா சொத்து பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அதில் அவ்வாறு தான் சொல்லியுள்ளார். தாவா சொத்துக்கு கீழ்புறம் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் 200 அடி தாண்டி உள்ளது. இடைப்பட்ட இடத்தில் வீடுகள், சர்ச், 16 அடி பாதை உள்ளது. 1ம் பிரதிவாதியின் வீட்டில் இருந்து பார்த்தால் தாவா சொத்து தெரியும் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவ்வாறு தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9.தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையுமான பரமானந்தம் குடிசை வீடு கட்டி தங்கி வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த குடிசை வீடு 2023 பெருவெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சுற்றி உள்ள கல்தூண் மற்றும் கம்பி வேலிகளை பிரதிவாதிகள் தான் அமைத்துள்ளனர் என்றால் சரியல்ல. நான் மேற்படி கல்தூண்களை உடைத்து கம்பி வேலிகளை சேதப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

10.நான் நாசரேத் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கான ரசீது மற்றும் மனு நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டில் உள்ளது. நான் சொல்வது போல் புகார் மனு மற்றும் ரசீது கிடையாது என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்களா என்றால் ஆம். எந்த வருடம் புகார் கொடுத்தேன் என்றால் கடந்த வருடம் கொடுத்தேன். தேதி ஞாபகம் இல்லை. தாவா சொத்தில் என் மனைவிக்கோ அவரை தொடர்ந்து எங்களுக்கோ எவ்வித உரிமையும் அனுபவமும் பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.05 20:41:17 +0530

11.1ம் பிரதிவாதி அவரது கணவர் பெயரில் நில ஒப்படைவு கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அது குறித்து எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து தெரிந்துகொண்டேன். தாவா சொத்தில் கதவு எண் இல்லாத செட் இருந்ததால் தான் நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேட்டில் காலி மனை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. அரசு நிலம் ஒப்படைக்கும்போது ஒரு நபருக்கு ஒரு ஏர்ஸ் கொடுக்கப்படும் என்றால் சரிதான்.

12.வா.சா.ஆ 8 நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேட்டில் புல எண் 475/24 ன் விஸ்தீரணம் ஒரு ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு அருகில் உள்ள அவர்களது நிலத்துடன் தாவா சொத்தினையும் அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எந்த காலத்திலும் பென்சிங் அமைத்தது இல்லை என்றால் சரியல்ல.

13.நான் எனக்கு உரிமையும், அனுபவமும் இல்லாமல் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.05 20:41:22 +0530